06.02.2026

O.S.No.295/2015

பி.வா.சா.1.திரு.அருண்குமார், த.பெ.லேட்.கண்ணன்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1) நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியும். எனது தகப்பனார் கண்ணன் இறப்பிற்கு பின்பு நாங்கள் இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் ஆமாம். எனது தகப்பனார் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை விவரம் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பி.வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணத்தில் எனது தகப்பனார் கண்ணன் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். அந்த சொத்தானது வாதியின் சுய சம்பாத்தியத்தில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை கிரையம் வாங்கியதில் இருந்து வாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் ஆமாம். நான் 1993ம் ஆண்டு பிறந்தேன். நான் பிறந்து 10 வயது வரை நடந்த விவரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். ஆனால் எனது அப்பாவும் வாதியும் சொல்லி தெரியும்.

2) எனது நிரூபண வாக்குமூலம் பத்தி 6ல் வெள்ளையன்பட்டியில் பொதுவில் இருந்த வீட்டை நாங்கள் விற்பனை செய்துவிட்டு அதன் பின்னர் Y.புதுப்பட்டி, கொட்டகைமேடு கிராமத்திற்கு வந்து வாதியும் எனது தந்தையும் ஒரு தோட்டத்து வீட்டில் குடியிருந்து வந்த நிலையில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது சம்மந்தமாக எந்த வருடம், மாதம் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. மேலும் எனது நிரூபண

வாக்குமூலத்தில் அந்த முகவரியில் உள்ள பொது வீட்டை விற்றுவிட்டு என்று சொல்லியுள்ளது சம்மந்தமாக ஆவணங்கள் எதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அப்போது நான் பிறக்கவே இல்லை எனவே அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் வெள்ளையன்பட்டியில் வீடு கட்டி குடியிருந்து வர வாதி எனது தகப்பனாரிடம் விருப்பம் தெரிவித்தார் என சொல்லியுள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எனது அப்பாவிடம் வாதிக்கு குழந்தை இல்லை என்பதால் என்னை தத்து கேட்டப்போது எனக்குதான் அந்த இடம் கொடுப்பதாகவும் வெள்ளையன்பட்டியில் வீடு கட்டி கொடுப்பதாகவும் கூறினார். மேற்படி விவரத்தை எனது அப்பா தாக்கல் எதிர்வழக்குரையிலோ நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலோ நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

3) நான் நிரூபண வாக்குமூலத்தில் 9ம் வகுப்பு வரை வாதி என்னை படிக்க வைத்தார் என்று சொல்லியுள்ள சம்மந்தமாக எந்த பள்ளியில் படிக்க வைத்தார் என்று எந்த ஒரு குறிப்பும் காணப்படவில்லை என்றால் சரிதான். மேலும் 9ம் படித்த பின்பு வாதி என்னை வேலைக்கு அனுப்பிவிட்டார் என்றும் சம்பளத்தை வாதியிடம்தான் கொடுத்தேன் என்றும் சொல்லியுள்ளது சம்மந்தமாக என்ன வேலைக்கு சென்றேன் என்று எந்த ஒரு குறிப்பும் காணப்படவில்லை என்றால் சரிதான். கூலி வேலைக்கு சென்றேன். நிரூபண வாக்குமூலத்தில் வாதி என்னை 9ம் வகுப்பு வரை படிக்க வைத்தார் என்று சொல்லியுள்ளதும் அதன் பின்பு கூலி வேலைக்கு சென்று சம்பளத்தை வாதியிடமே கொடுத்தேன் என்று சொல்லவதும் நான்

தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

4) பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டபோது எனக்கு 9 வயது இருக்கும். எனக்கு 9 வயது இருக்கும் என்பதால் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன எழுதப்பட்டு இருந்தது யார் எழுதி கொடுத்தது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறித்த விவரம் எனக்கு எந்த வயதில் தெரியவந்தது என்றால் 15 வயதில் தெரியவந்தது. வாதியும் என்னிடம் சொல்லியுள்ளார். நிரூபண வாக்குமூலம் பத்தி 7ல் பத்திர சரத்துக்களில் நடந்துக் கொள்ளாமல் அசலையோ வட்டியையோ செலுத்தாமல் அசலை திருப்பி கேட்டப்போது என்னால் தற்சமயம் திருப்பிக் கொடுக்க இயலாது என்றும் ஆகவே நீ ஈடுகடன் தேதியில் இருந்து குடியிருந்து வருவதுபோல தொடர்ந்து குடியிருந்து வர சம்மத்திக்கிறேன் என்று சொன்னதன் அடிப்படையில் என்று சொல்லியுள்ள விவரம் எந்த நாள் எந்த மாதம் எந்த வருடம் என குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

5) பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டப்போது நான் இளவர் என்பதால் அந்த ஆவணத்தின் உண்மை தன்மை குறித்து என்னால் சொல்ல இயலாது என்றால் சரியல்ல எனது அப்பா பணம் கொடுத்தது உண்மைதான். நிரூபண வாக்குமூலம் பாரா 8ல் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் சம்மந்தமாக எந்த தேதியில் எங்கு வைத்து சொல்லப்பட்டது என்று குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலம் பாரா 8ல் சொல்லியுள்ள விவரம் நடைபெறவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நிரூபண வாக்குமூலம் பத்தி 9ல் பஞ்சாயத்தார் முன்னிலையில்

வாதியும் எனது அப்பாவும் பேசி முடிவு செய்துள்ளது சம்மந்தமாக பஞ்சாயத்தார்கள் யார் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.